திரு. தி. ரா. மாசிலாமணி அவர்கள் 1989-ஆம் ஆண்டு முதல் 1991-ஆம் ஆண்டு வரை அன்றைய செங்கல்பட்டு மாவட்டம் பூவிருந்தவல்லி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியுள்ளார்.

அன்னார்களது மறைவு குறித்து, அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த அப்பெரியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

முற்பகல் 10-05

## 2. இரங்கல் தீர்மானங்கள்

### (அ) திரு. ந. கணபதி, பேரவையின் முன்னாள் துணைத் தலைவர் மறைவு

### (ஆ) திரு. கே.பி. கந்தசாமி, முன்னாள் அமைச்சர் மறைவு

### (இ) 'முத்தமிழ்க் காவலர்' திரு. கி.ஆ.பெ. விசுவநாதம் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானங்கள். கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானங்களைப் பேரவைமுன் வைக்கின்றேன்:

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், பேரவை முன்னாள் துணைத் தலைவருமான திரு. ந. கணபதி அவர்கள் 13-12-1994 அன்று மறைவுற்ற செய்தி குறித்து இப்பேரவை மிகவும் வருந்துகிறது.

திரு. ந. கணபதி அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டுவரை தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியிலிருந்தும், 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை சென்னை, மைலாப்பூர் தொகுதியிலிருந்தும் இருமுறை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றியுள்ளார். மேலும், அவர், 1974 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டுவரை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் துணைத் தலைவராகச் சிறந்த முறையில் செயலாற்றியுள்ளார்.

அன்னாரது மறைவு குறித்து, அவரை இழந்துவிட்ட அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் தெரிவித்துக்கொள்கிறது."

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான திரு. கே.பி.கந்தசாமி அவர்கள் 29-12-1994 அன்று மறைந்தது குறித்து இப்பேரவை தனது ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

திரு.கே.பி. கந்தசாமி அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரை அன்றைய திருநெல்வேலி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியிலிருந்தும் மற்றும் 1989 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் தொகுதியிலிருந்தும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்புறப் பணியாற்றியுள்ளார். மேலும், 1989 முதல் 1991 வரை இந்து சமய அறநிலையத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்று செயல்பட்ட அவர் தன் பொறுப்பில் நாளேடுகள் பலவற்றைத் தமிழகம் முழுவதும் வெளியிட்ட பத்திரிகையாளராகவும் திகழ்ந்தவர் ஆவார்.

அன்னாரது மறைவு குறித்து அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கும், பத்திரிகை உலக நண்பர்களுக்கும் இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது."

"தமிழ்ப் பெருங்குடி மக்களால் 'முத்தமிழ்க் காவலர்' என்று போற்றிப் புகழப்பட்ட டாக்டர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் தமது 95-வது ஆண்டில், 19-12-1994 அன்று மறைவுற்றது மிக்க துயரத்தை அளிக்கக்கூடிய பெருந்துயரச் செய்தியாகும்.

அவர், தமிழ்நாட்டில் வல்லாங்கு வாழ்ந்து, புகழோடும், பெருமையோடும் திகழ்ந்தார். 1899 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ஆம் நாள் பிறந்த அவர், தமது 20-வது வயதிலேயே, பொது வாழ்வில் தீவிரமாக ஈடுபட்டார். அவர் சர்.பி.டி.தியாகராயர் தொடங்கிய நீதிக் கட்சியிலும், பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்திலும், நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு அரும்பாடுபட்டார். அவர் தமிழ்ச் சமுதாய மறுமலர்ச்சிக்கான பல்வேறு பணிகளில் தம்மைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டார்.

தமிழகத்தில் இந்தித் திணிப்பு முயற்சிகள் ஏற்பட்ட ஒவ்வொரு தருணத்திலும், அத்தகைய முயற்சிகளை எதிர்த்து, நடைபெற்ற அறப் போராட்டங்களில், முன்னணி வீரர்களில் ஒருவராக அவர் திகழ்ந்தார்.

தமிழ் எல்லா வகையிலும் வளரவும், தமிழர்கள் மேம்பாடு எய்தவும், தமிழ்நாடு வளம் பெறவும், பல்வேறு வழிகளில் அரும்பணியாற்றி வந்தார். தமிழிசை இயக்கம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வேரூன்ற உறுதுணையாக நின்றார்.

தமிழர்களின் தொன்மையான சித்த மருத்துவம் நன்கு வளரவும், நாடெங்கும் பரவிடவும் அரும்பாடுபட்டு வந்தார். தஞ்சையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் தோன்றவும், குறள் நெறி பரப்பு மையம் அமையவும் அவர் மிகவும் தூண்டுகோலாக இருந்தார். அவர் சிறந்த பேச்சாளர்; கவர்ச்சிகரமான எழுத்தாளர். அவர் இரு வேறு பல்கலைக் கழகங்களில் ஆட்சிக் குழு உறுப்பினராகப் பணியாற்றி வந்ததோடு, அப்பல்கலைக் கழகங்களால் மதிப்புறு டாக்டர் பட்டம் வழங்கப் பெற்று சிறப்பு செய்யப்பட்டார். அவர் "முத்தமிழ்க் காவலர்", "தமிழ்ச் செம்மல்", "தமிழ்ப் பேரறிஞர்", "தமிழ்ச் செல்வம்", "திருக்குறள் மணி", "கலைமாமணி", "இலக்கியச் செல்வர்", "செந்தமிழ்க் காவலர்" போன்ற சிறப்புமிக்க பட்டங்கள் பலவற்றையும் பெற்றுத் திகழ்ந்தார்.

முற்பகல் 10-10

அவர் சுவை மிகுந்த முப்பதுக்கும் மேற்பட்ட இலக்கியப் படைப்புகளை தமிழ் உலகுக்கு அளித்துள்ளார். அவருக்குத் தமிழக அரசு "திருவள்ளுவர் விருதினை" வழங்கி அவரைப் பெருமைப்படுத்தியது. அவர் பல்வேறு உலகத் தமிழ் மாநாடுகளில் கலந்துகொண்டு சீரிய சொற்பொழிவுகளை ஆற்றினார். சித்த மருத்துவத்தில் அவருக்கிருந்த தணியாத ஆர்வத்தின் காரணமாக இன்றைய அரசின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அரசின் சித்த மருத்துவ வாரியத் தலைவராக நியமிக்கப்பட்டு, அவரது மறைவு காலம்வரை செவ்வனே பணியாற்றி வந்தார். இவ்வாறு பல்வேறு சிறப்புக்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கி, சான்றோர் பலராலும் பாராட்டப்பெற்ற "முத்தமிழ்க் காவலர்" கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்கள் மறைந்ததைக் குறித்து இப்பேரவை வருந்துவதோடு, அவரை இழந்து வருந்தும் அவரது குடும்பத்தினர்க்கும், அவரது உற்றார் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் தனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது."

இத்தீர்மானங்களை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த அப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்துநின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)